1935-ம் ௵ செப்டெம்பர் ௴

# தமிழகம்

ஓர் இனிய மாதாந்தரப் பத்திரிகை

## பொருள் அடக்கம்

தமிழகம்—வித்துவான் அ. சோக்கலிங்கம் பிள்ளை
உலக சம்பவங்கள்
விகடப் பகுதிகள்
செய்தித்திரள்
அமளி—"ஸ்பிசி"
டிமைத்தனம்
ாலத்தின் கோலம்—S. E. Gnaniah
கிரங்கக் கடிதம்
ாண்டிலின் மேல் கண்—J. G. Sundar
றுவர் பகுதி: சார்லி கூல்சன்—"பாண்டியா"
ன்னம்—M. Swiseshan
தெள்ளுரை—J. G. S.

OFFICE OF THE REGISTRAR
9 - SEP 1935
MADRAS

# தமிழகம்

| | உள் நாடு | வெளி |
|---|---|---|
| வருஷ சந்தா. (தபாற்கூலி உட்பட) ரூ. | 1—0—0 | 1—8 |
| தனிப்பிரதி. | 0—1—0 | 0—2— |

1. சந்தாத்தொகையை மணியார்டர் மூலமாக, அனுப்பவேண்
2. விலாசமாறுதலுக்கு, சந்தா எண்ணைக்குறித்து புதிய வி
சத்தைத் தெரிவிக்க வேண்டும்.

## கட்டுரையாளர் கவனிக்க.

ஹாஸ்யம் நிறைந்த கட்டுரைகளையும், சிறு கதைகளையும் 'தமி
கம்' ஏற்றுக்கொள்ளும். விஷயங்கள் காகிதத்தில் ஒரே பக்கத்தில்
வாக எழுதப்பட்டிருக்க வேண்டும். 'தமிழகம் இரண்டு பக்க
துள் அடங்கக்கூடிய கட்டுரைகள் பிரதானமாகக் கருதப்படும்
டுரைகள் எளிய நடையில் எழுதப்படவேண்டும். பிரசுரிக்கப்படும்
விஷயங்கள் காப்பிரைட் பிரசுர கர்த்தாவுக்கே உரிமை. பிரசுரிக்க
படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்புபவர் வி
சத்துடன் கூடிய முத்திரையொட்டிய உறை அனுப்பவேண்டும். க
டுரைகளுடன், அதை எழுதியவரின் பெயரும் விலாசமும் குறிப்பிட
படவேண்டும். பத்திராசிரியருக்குக் கடிதம் எழுதவேண்டிய அவசி
மில்லை. பொதுவாக விஷயங்களுக்குச் சன்மானம் அளிக்கப்ப
மாட்டா. ஆனால் பத்திராசிரியர் இஷ்டப்பட்டு சிலருக்குச் சன்மான
கொடுக்கப்படும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முழுப்பக்கத்திற்கு ஒரு தடவைக்கு | ரூ | 2—8—0 |
| அரைப்பக்கத்திற்கு | ,, | 1—8—0 |
| கால்பக்கத்திற்கு | ,, | 1—0—0 |

நீடித்தகாலம் விளம்பரம் செய்வோர் பத்திராதிபருக்கு எழுத

## ஏஜெண்டுகள் தேவை.

தமிழகத்தின் நல்வாழ்வைக்கருதி ச... ஏஜெண்டுகள் தேவை. ... எழுதவும்.

# தமிழகம்

(வித்வான். அ. சொக்கலிங்கம், தமிழாசிரியர், நாசரேத்)

## நேரிசை வெண்பா.

அம்புவியுள் கொள்கை அனைவோர்க்கும் நின்றளிக்கும்
செம்பொருளை என்றென்றும் சிந்திப்பாம்—நம்பெரிய
தமிழகத்தே தோன்றி யருந் தமிழகத்தைத் தோற்றுவிக்கும்
தமிழகத்தைக் காத்தருளத்தான்.

**தமிழகம்** என்பது தமிழ் வழங்கும் இடம் எனப் பொருள் படும். அவ்விடம் கிழக்கே கீழ்கடலும் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே மேல்கடலும் வடக்கே வேங்கடமலையும் எல்லைகளாக உடையது எனப் பெரியோர் கூறியுள்ளார். எனவே இந்நான் கெல்லைக்குட்பட்ட நிலப்பகுதியே தமிழகம் என்பது தெளிவாம்.

**தமிழகம்** தமிழ்=இனிமை அகம்=இடம் இனிமையுள்ள இடம் எனவும் பொருள் பயக்கும். இனிமை எனும் பண்பு தமிழ் மொழியில் நிறைந்துள்ளதென்பது யாரும் மறுக்க இயலாத தொன்றும். தமிழ் மொழி தமிழ் மக்களிடத்தே தோன்றியதாதலால் தமிழ் மக்கள் இனிமைப்பண்புமிக்கவர் என்பது சொல்லாமலே அமையும். மக்களிடத்து இனிமை இன்றேல் அவர்கள் பேசும் மொழியிடத்து இனிமை இருக்க இயலாதல்லவா? இனிமை சான்றமக்கள் தொன்றுதொட்டு வாழுமிடம் இனிமையுள்ள இடமாக இருக்கும் என்பதை இயம்பவும் வேண்டுமோ.?

**தமிழகம்** தமிழ்=இனிமை அகம் = உள்ளம்=இனிய உள்ளம் எனவும் பொருள்தரும். தமிழ் உள்ளம் (தமிழ் மகன் உள்ளம்) தீமையுள்ளதாக இருக்க இயலாது. கருத்திலும் தீமை தோன்றாது. செயலினும் தீமை காணப்படமாட்டாது. அது தான் தமிழ் உள்ளம் எனும் தகைமைசான்றது. இனிய உள்ளம் என இயம்பப்படுவது. தீமைக்கிடந்தருமேல் அது தமிழ் உள்ள மன்றும். அதனுள் இனிமைப் பண்பைக் காணுதல் இயலாது.

தமிழ் நாட்டில் தோன்றி மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தி இனிய கருத்துக்களைப் புலப்படுத்தி உலவுமாதலால் இவ்விதழ் தமிழகம் என்னப்பட்டது.

# உலக சம்பவங்கள்

## இத்தாலியா அபிசினியா போர்

நமக்கு பத்திரிகைகள் மூலமாகக் கிடைக்கும் செய்திகளிலிருந்து இவர்களின் போருக்கு காரணத்தைக் கண்டுபிடிக்க இயலாது. கொஞ்ச வருஷங்களுக்கு முன் அபிசினியாவோடு இத்தாலியா சண்டை போட்டு தோல்வியடைந்ததைப் பற்றி இத்தாலியா வர்மம் வைத்துக்கொண்டேயிருக்கிறது. அபிசினியாவைப் பிடித்து தன் கைக்குள் வைத்துக்கொள்ளவேண்டும் என்று இத்தாலியா பிரயாசப்படுகிறது.

இருதேசங்களும் சர்வதேச மகா நாட்டுக்கு (League of Nations) அங்கத்தினர்களே. ஆனால் சர்வதேச மகா நாடு தேசத்கின் குற்றங்களை கண்டிக்க இயலாதபடி பெலனற்றதாகயிருக்கிறது.

இத்தாலியாவில், சண்டைக்காக வேண்டிய ஏற்பாடுகள்செய்யப்படுகின்றன. இத்தாலியாவின் செய்கை ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதையை ஒத்ததாக இருக்கிறது. இத்தாலியா அபிசினியாவைப் பார்த்து உன் தகப்பன், முன் சண்டையில் என்னை ஜெயித்தான். இப்போது உன்னை நான் விடுவேனா பார் என்று சொல்லுகிறது.

அபிசினியா சண்டை செய்வதில் கெட்டிக்காரர்களாகவிருந்தபோதிலும் இத்தாலியரின் ஆகாயக்கப்பல் படைக்கும் நஞ்சுப்புகைக்கும் என்னபாடுபடப் போகிறார்களோ தெரியவில்லை.

பூர்வ நாட்களில் இருந்து சுய அரசாட்சியில் வாழும், கருப்பு மனிதர்களின் தேசம் அபிசினியா ஒன்றே. இத்தாலியர் (Dictator) (டிக்டெட்டர்) மந்திரி முசோலினி வெள்ளையரல்லாத ஏனையோர் அடிமைகள் என்றும் தீழ்ப்பானவர்களென்றும் கேவலமாகப் பேசுகிறார்.

இத்தாலியாவின் செய்கையைத் தடுப்பதற்கு மற்றெந்த தேசமும் முன்னுக்கு வருவதாகத் தெரியவில்லை. அமெரிக்கா இது என்னுடைய காரியமல்ல என்று சொல்லுகிறது. பிரான்சும் இங்கிலாந்தும் முன் வந்தால் இச்சண்டையைத் தடுத்து

விடலாம். ஆனால் எல்லோரும் சுயநலமாகத் தானிருக்கிறார்கள். இருதேசத்தாரும் கிறிஸ்தவர்களே. இத்தாலியா தேசம், ஐரோப்பாவிலும், அபிசினியா ஆப்பிரிக்காவிலும் இருக்கிறது.

## பூமியதிர்ச்சி

இந்த வருஷம் மே மாதம் 31-ம் தேதியன்று வடமேற்கு இந்தியாவிலுள்ள, குவெட்டா என்ற பட்டணத்திலும், அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் கடுமையான ஓர் பூமியதிர்ச்சி உண்டானது. இப்பூமி அதிர்ச்சி காலை 3-02 மணி நேரத்தில் நடந்தது. அரை நிமிஷமே பூமி அதிர்ந்தது. இவ்வளவு நேரத்துள் வீடுகளெல்லாம் தரையோடு தரையாக்கப்பட்டது. பூமி அதிர்ச்சிக்குள் அகப்பட்ட பிரதேசம் 300000 சதுர மைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதைப் போலொத்த பூமிஅதிர்ச்சி 1905 வருஷம் கங்ரா என்ற இடத்தில் நடந்தது. இதில் 20,000 பேர் அழிந்து போனார்கள்.

## புதிய வைசிராய்

இப்போது இருக்கும் வைசிராய் வில்லிங்டன் பிரபு இன்னமும் எட்டு மாதங்கள் வரைக்கும் வைசிராயாய் இருப்பார். அவருக்குப் பின் புதிய வைசிராய் லின்லித்கௌ பிரபு அப்பதவியை ஏற்பார்.

## இந்தியர்களின் முதன்மை

ஹாக்கி விளையாட்டில் உலகப் பிரசித்தி பெற்றவர்கள் இந்தியர்கள். இவர்களை ஜெயிக்க ஒரு தேசத்தாராலும் முடியவில்லை. சமீபத்தில் இந்திய ஹாக்கி கோஷ்டி நியூஸிலாண்டில் பல (Team) களோடு விளையாடியிருக்கிறார்கள். எல்லா (Match) பந்தயத்திலும் ஜெயித்து வெற்றி பெற்றார்கள்.

## வீட்டுக்குள் மலைப் பாம்பு

குப்பம். ஆகஸ்டு 17.

கந்தப்பன் என்ற சமுசாரி, ஒரு மலைப் பாம்பினின்று எப்படித் தப்பிப் பிழைத்தான் என்று இங்கு விசேஷமாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

கந்தப்பன் அதிகாலையிலேயே தன் வீட்டை விட்டு தன் நிலங்களைப் பார்வையிடப் போயிருந்தான். அவன் தன் வீட்டுக்கு திரும்புகையில் தன் வீட்டின் பக்கத்தில் ஒரு பெரும் பாம்புத்

தடம் தரையில் பதிந்திருப்பதைக் கண்டு, தடத்தை நோக்கிச் சென்றான். பாம்புத் தடம் வீட்டை நோக்கிச் சென்றிருப்பதைக் கண்டு, வீட்டுக்குள் நுழைந்து உற்று நோக்க ஆரம்பித்தான்.

சமையலறையை அடைந்து சுற்றிப் பார்க்கையில் 15 அடி நீளமும் ¾ அடி பருமனும் உள்ள ஓர் மலம் பாம்பு சமையலறைக் கதவைச் சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்று பயத்தால் நடுங்கினான். கதவின் வழியாக அடுத்த புக்கம் செல்ல இயலாதபடி திகைத்தான்.

கடைசியாக ஓர் எண்ணம் அவன் மனதில் உதித்தது. கூரையில் ஒரு அடி சதுரமுள்ள ஓர் துவாரம் இருந்தது. அதன் வழியாக தன்னை வெளியே எடுக்க பிரயாசப்பட்டான். உடம்பு பூராவாகவும் வெளியே வரக்கஷ்டப்பட்டது. பக்கத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவனை சத்தமிட்டு கூப்பிடவே அவன் இவனை வெளியே இழுத்து மீட்டான்.

## வழிப்பறி புதியம்புத்தூர், ஆகஸ்டு 17.

தூத்துக்குடி, எட்டியாபுரம் ரோட்டில் காலை சுமார் 3 மணிக்கு புதியம்புத்தூர் வண்டிகள் தூத்துக்குடிக்கு 4 மைலுக்கு அப்பால் உள்ள எசக்கி அம்மன் கோயில் பக்கத்தில் ஒரு கொள்ளைக் கூட்டத்தாரால் நிறுத்தப்பட்டது.

கொள்ளைக் கூட்டத்தாருக்கும், வண்டிக் காரருக்கும் சண்டை ஏற்பட்டது. அதில் சாலை நாடார் என்ற புதியம்புத்தூர் வாசி, கொல்லப்பட்டார். வெற்றிவேல் நாடாருக்கு தலையில் பெருத்தகாயம்.

கந்தசாமிக் கவுண்டருக்கும் பலத்த காயம் கவர்ண்மென்று ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப்பட்டார். அவரிடமிருந்து (Dying declaration) மரண வாக்குமூலம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

நாசரேத் கோபுரம் கட்டுமானவேலை மறுபடியும் ஆரம்பித்து புதுசாரம் போடப்பட்டிருக்கிறது.

“சாரம்மா” வேலை நடத்துவார்கள் என்று உத்தேசிக்கிறோம்.

நாசரேத் யூனியன்போர்டு தெருக்களின் கேவல ஸ்திதியைக்கண்டு ஏன் பேசாமலிருக்கிறது?

இராத்திரி கல்கள் கால்களோடு “பேசுகிறது!”

# விகடப் பகுதிகள்

## கேட்டுக்கொள்வான்

"நீயும் உன் மனைவியும் நன்றாய் பேசிக்கொள்வீர்களா"

"நான் அவள் சொல்வதைக் 'கேட்டுக் கொள்வேன்"

## ஒரே அடி

ஒரு தடியனும், ஒரு மெலிந்தவனும் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

மெலிந்தவன் "நான் உன்னை அடித்தேன் என்றால், என்னைத் திரும்பி அடிக்காதபடி அடிச்சுபுடுவேன்"

"நான் உன்னை அடித்தேன் என்றால், என்னை, நீ ஓர் காலமும் அடிச்சுக்கொள்ள மாட்டாய்.

## தைரியசாலி.

ஒரு புருஷனும், பெண்சாதியும் ஒரு ரஸ்தா வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு மாடு, வெருண்டு, அவர்களுக்குப் பின்னாக ஓடிவந்தது. இதை அவள் கண்டு ஒரு வேலி மறைவில்போய் மறைந்து கொண்டாள். ஓடி வந்த மாடு, அந்த மனிதனை முட்டி தள்ளி, ஒரு கிடங்குக்குள் கொண்டு போட்டது. எழுந்து முதுகைத் தடவிக்கொண்டிருக்கையில், பக்கத்தில் தன் மனைவி நிற்பதைக்கண்டு

"அலமு, இனி இப்படி என்னைக் கீழே தள்ளினாயென்றால், எனக்குக் கட்டாயம் கோபம் வந்துவிடும்'' என்றான்.

## தன்வினை

ஒரு பையன், உபாத்தியாயரிடம், வாயில் வந்தபடி கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். உபாத்தியாயர் பொறுமையோடு, கேட்டுக்கொண்டேயிருந்தார்.

கடைசியாக "சார், ஒரு கழுதை, எவ்வளவு காலத்துக்கு புத்தியில்லாது ஜீவிக்கும்'' என்று கேட்டான்.

"இதுவரைக்குமே" என்று உபாத்தியாயர் இரண்டு அவன் முதுகில் போட்டார்.

## சிக்லீவ்.

சாமுவேல் ரைட்டர்:— சார், மிஸ்டர் நாராயணன், நம்முடைய ஆபீசில் நீங்கள் மட்டுந்தான் சிக்லீவ் (sick leave) எடுக்கிறதில்லை. அதினுல்தான் உங்கள் மேல் நமது துரைக்கு ரெம்பச் சந்தோஷம்.

நாவியணையங்கார்:— சிக்குலீவென்று, நமக்கெல்லாம் தலைமுடி உச்சியில்தானே அஞ்சாறு இருக்கிறது. சிக்கு எப்படி விழும். சிக்கு விழுந்தால்தானே எடுப்பேன், சிக்கு இல்லாமலே எடுக்கச் சொல்லுவரயளா? எல்லாம் ஒழுங்காய் இருந்தால் சிக்கு எப்படி வரும்!

## தப்பிதம்.

உபாத்தியாயர்:— ஏனடா குப்புசாமி பாடமெல்லாம் தப்பிதமாய் எழுதியிருக்கிருய்?

பையன்:— இல்லைசார் உங்களுக்கு நான் போட்ட தப்பிதங்கள் தெரியுமா என்று பார்க்கத்தான் எழுதினேன்.

*　　　*　　　*

காசுக்கடைக் கோமதிநாயகம் செட்டியார்:— (ஹிண்டுப் பேப்பரைப் பார்த்துவிட்டு) "மலையாளத்தில் பெரிய வால் வெள்ளி உருகிப்போனதாக ஜனங்கள் பார்த்தார்களாம். பேப்பரில் போட்டிருக்கிறது. சில விஞடிக்குள் மறைந்து விட்டதாம்.

அங்கு நகை வேலை செய்யும் சிங்காரவேலு ஆசாரி:—உடனே தண்ணீரைக் கோதி விட்டிருந்தால் கட்டியாய்ச் சேர்ந்திருக்கும் அங்கே தட்டாசாரி இல்லையா?

செட்டியார்;— அப்படி வெள்ளிகளெல்லாம் உருகப் போய்த்தான் தென்னிந்தியாவில் மழை, தண்ணீரே மத்திபம்.

## வராத பையன்கள்

பாடசாலைப் போாசிரியர்:— அடே, பசங்களா! இப்போது பாடசாலைக்கு வாாமல் வீட்டிலிருக்கிறவர்கள் கையை உயர்த்துங்கள்.

பையன்கள்:— தொண்டையைத்தான் உயர்த்தினர்கள்.

## தக்கபதில்

புருஷன் கழுத்தில், மாலை கிடப்பதைக்கண்ட மனைவி, கேலிக்காக, "ஏது, யார் உங்களுக்கு, தாலி கட்டினது"

பெண்ஜாதிக்கு பயந்த அவன் நீதான் என்றுன்.

*　　　*　　　*

மரகதவல்லி:- அடி மீனு செக்கண்ட் பெல் (Second be
அடிச்சாச்சு, அன்னுபாரு................பாட்டனி அக்கா கிள
டோர் கிட்டக்க வந்து நிற்கிறது.

மீனும்பாள்;- என்னடி மரகதம் வாசல் கிட்ட பாட்டன
நிற்கிறதா? அக்கா நிற்கிறார்களா?

மரகதவல்லி:- இல்லடி மீனு தெரியாமல் வாயில் வந்து விட்டது. தமிழிலக்கணம் இப்பொழுதுதானே நமது பாடசாலையில் விளங்குகிறது. இனிமேல் உயர்திணை, அஃறிணை கவனித்துப் பேசுவேண்டி................

* * *

உபாத்தியாயர். 300 மாங்காயை மூன்று பேருக்குக்கொடுத்தால் ஒவ்வொருவனுக்கும் என்னவரும்?

மாணவன். காய்ச்சல் (Fever) வரும்.

* * *

கர்வி:— (சங்கீத வித்வானிடம்) உம்மால் கழுதை காம்போதி ராகம் பாடமுடியுமா?

வித்வான்:— உங்களுடைய ராகத்தை நான் எப்படி பாடமுடியும்.

* * *

ஒரு சாஸ்திரியார் ஒருவர் தன் வீட்டுக்கு விருந்தாளியாய்வந்த கோதண்ட ராமய்யனிடம் கேட்டதாவது.

சாஸ்திரியார்:— ஓய்! கோதண்டரே! உம்மைக்கண்டு நாளாகிறதே, எது, அத்தி பூத்ததுபோல் இருக்கின்றதே.

கோதண்டன்:— இல்லை நான் பெண் விஷயமாக வந்தேன். உங்களிடம் பெண் இருப்பதாக சொன்னார்கள். குட்டியினுடைய குணதிசயங்களெல்லாம் எப்படியோ என்று தெரிந்து போகலாமென்று வந்தேன்.

சாஸ்திரியார்:— ஓய், அதைப்பற்றி ஒன்றும் யோசிக்க வேண்டாம். நம்ம ஆத்துக்குட்டி கோகிலம் நல்லவள். இதுவரையும் ஒருவரையும் பார்த்திருக்கவில்லை. ஏனென்றால் அவளுக்கு இரண்டு கண்களும் குருடு.

---

பிள்ளையன்மனை பாஸ்ரேற்றைச் சேர்ந்தவர்களில் ஒரு பிரிவார் மிஷனோடு கோபித்துக் கொண்டு புதிய பள்ளிக்கூடம் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

பிள்ளைகள் புதிய பாடம் படிக்க வேண்டாமா!?

# செய்தித் திரள்

## இடையன்குடி

இங்கு ஒரு ஹைகூல் ஏற்படுத்த திருநெல்வேலி அத்தியக்ஷாதீன கமிட்டி அனுமதியளித்திருக்கிறதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

## மெஞ்ஞானபுரம்

சி. எம். எஸ். ஹைஸ்கூல் புதுக்கட்டட வேலை நவம்பர் மீ முதல் ஆரம்பிக்கப் போகிறதாம்.

## நாசரேத்

ஆகஸ்டு மீ 1-ம்தேதி நாசரேத் ஆண்கள் ஹைஸ்கூல் புதியகட்டிடம் அஸ்திபாரம் போடப்பட்டது. வேலை மிகதுரிதமாய் நடக்கிறது.

## வேதசாஸ்திர கல்லூரி

கடந்த 35 வருஷங்களாக நாசரேத்தில் இருந்துவரும் (*Bishop's Theological Seminary*) வேத சாஸ்திரக் கல்லூரி அடுத்த வருஷம் ஜூன் மாதம் பசுமலைக்கு போக நிச்சயித்திருப்பது யாவருக்கும் துக்கமான காரியமாகும்.

நாசரேத்தில் காலனி (*Coloney*) என்று பேர் வளங்குகிற ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் வியாபாரஸ்தலத்தில் உள்ள பிள்ளைகளுக்கென்று புதிதாக ஒருபள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டு 3உபாத்திமார் வேலைபார்த்து வருகிறார்கள்.

*　　　*　　　*　　　*

நாசரேத்திலும் அதன் சுற்றுப்பக்கங்களிலும் உள்ள குளங்களுக்கு சாரல் மழையால் தண்ணீர் வராததால் இவ்வருஷம் கார் பயிரிடப் படவில்லை. இப்பக்கங்களில் அநேக கிணறுகளில் தண்ணீர் மெத்தகுறைவு.

*　　　*　　　*　　　*

இவ்வருஷம் வெயிலின் அகோரத்தாலும், மலையிலிருந்து குளங்களுக்கு தண்ணீர் வராததாலும் விஷக்காச்சல், விஷபேதி, வைசூரி, தாட்டைகட்டு ஆகிய வியாதி பல இடங்களில் நடமாடுகிறது.

*　　　*　　　*　　　*

தூத்துக்குடி, திருநெல்வேலி இவ்விடங்களிலிருந்து ஒவ்வொரு நாளும் கார் சர்வீஸ் நாசரேத், மெஞ்ஞானபுரம், சாத்தான்குளம், முதலூர், இட்டமொழி, திசையன்விளை, இடையன்குடி முதலிய இடங்களுக்குப் போக்குவரத்து செய்கிறது. முதலூரிலிருந்து சண்டங்கோட்டை வழியாய் படுக்கப்பத்துக்குப் போகுகிற ரோட்டு சீக்கிரம் முடியும்.

*　　　*　　　*　　　*

# அமளி

"ஸ்பிரி"

அரை வயிற்றுச் சாப்பாட்டுக்குச் சம்பளம் வாங்கிக் கொண்டு மெய் மறந்தவராக, இந்த மத்தியான வெயிலுக்குக் குடையை உபயோகியாது அதை ஊன்றுகோலாக வைத்துக் கொண்டு விரைந்து போகிறாரே அவரும் ஒரு உபாத்தியாரே. நற்குணமுடைய சுபாபியாகையால் அவருக்குப் பள்ளிக்கூடத்தின்மேல் அதிகமான எண்ணமோ, அல்லது தம்முடைய போக்கிரிக் கன்றுக்குட்டி மேலோவென்று அவரால் சொல்லமுடியாது. ஏதாவது வயலில் நுழைந்து கள்ளத்தீனி தின்கும் தம் கன்றுக் குட்டியை மாசக் கணக்காய் நல்வழிப்படுத்த ஆழவித்தை வைக்கிறார். "என் நல்ல கண்ணுக்குட்டி, களவு செய்வது பாவம், பிறர் பொருளை இச்சியாதே" என்று என்னலாமோ படிச்சுக் கொடுக்கிறார் ஆனால் அது தன் பிடிவாதகுணத்தை விடவில்லை. அதற்கு அதிகத்தைரியம் உண்டு, என்றபோதிலும், பள்ளிக்கூடத்துச் சிறுவரின் கைவரிசைக்குத்தான் அதற்குக்கொஞ்சம் பயம்.

இவர்தான் எங்கள் ஊர் பள்ளிக்கூடத்து முதலாம் வகுப்பு உபாத்தியார். எங்கள் ஊர் பிள்ளைகளுக்கு அறிவை அளந்து கொட்டுகிறவர் இவரே. அவர் வகுப்பில் எப்போதும் ஒரே அமளியாகத்தான் இருக்கும்.

சந்திரனுக்கு எண்ணத் தெரியாது. ஒன்று, இரண்டு, ஏழு, பத்து என்று சொல்லுகிறான். கருப்பனுக்கு அ வுக்கும் ஏக்கும் வித்தியாசம் தெரியாது. பிள்ளைகள் ஒருவரையொருவர் கிள்ளி விளையாடுவது இன்பம் விளைக்கும் காட்சி. மத்தியான வேளையில் அவருடைய ஒட்டை நாற்காலியில் சாய்ந்து தூங்குவார், குறும்புக்காரப் பையன்கள் அவர் தூங்குகையில் அவருடைய சட்டைப் பையிலிருந்து பொடி டப்பியை எடுத்து விளையாட ஆரம்பித்தால்—!

அவர் பிள்ளைகளுக்குக் கதை சொல்லும் போதெல்லாம், விநோதமாக இருக்கும். தாம் படிக்கும் தினசரி பத்திரிகை

களிருந்து சில சமயம் பிள்ளைகளுக்கு உபதேசிப்பார். சமீபத்தில் அவர் சொன்ன ஓர் சம்பவம் நான் கேட்க நேர்ந்தது.

“முசோலினி, என்ற ஒரு நீக்ரோ பெரிய ஓர் ஞானி அவர் அபிசினியா என்ற இடத்தில் இருக்கிறார். இப்போ, ஏதோ காடுகளுக்குள் போய் மிருகங்களுக்குப் புத்தி புகட்டப் போறாராம். இனிமேல், புலி, யானை, குரங்கு முதலியவைகளும் சட்டைகளை மாட்டி மனிதர்களைப்போல் வாசஞ் செய்யக் கற்றுக் கொடுத்துவிடுவாராம். இவர் ஓர் துறவி—துறவி என்றால் கடவுள் பக்தன் காட்டில் தவம் செய்யும் முனி— இப்படி துறவி யாவது மற்றவர்களுக்குப் பொறாமையாயிருக்கிறது. இப்படி மிருகங்கள் மேல் அன்புபாராட்டுகிறவர் எவ்வளவு நல்லவர். மற்றக்கெட்ட மனிதர்கள் இவரைத் தடுக்கிறார்கள். ஆனால் இவர் முன்வைத்த காலை திரும்ப எடுக்கமாட்டாராம்”

இதற்குள் அங்குள்ள மலையாண்டி

“சார்—சார்—அவரு காலை வைத்துப்பூட்டு திரும்ப எடுக்க மாட்டாருண்ணா எவ்வளவு நாளைக்கிநிப்பாரு. காலுவலியாது?”

“டே, அவரு பெரிய மனுஷண்டா” என்றான் கண்ணு.

“சார் சார், அவர நம்ம, உங்ககண்ணுக்குட்டியச்சரிபடுத்தச் சொன்னான்ன? அது ரொம்ப சேட்டபண்ணுது அவர்ட அத அனுப்புனா கொஞ்சக் காலத்துக்குள்ள சட்டபோட படிச்சுரும்”

இதற்குள் மணியடித்தது. வாத்தியார் வெளியே போகு முன் பையன்கள் வெளியே ஓடிவிட்டனர். (எங்கள் உபாத்தியாயர் ஒரு தடவைபள்ளிக்கூடத்து மானேஜர் மகனை அடித்துவிட்டார், இதனால் அவர் பட்டபாட்டை என்னிடம் சொல்லியிருக்கிறார். இதை அடுத்த இதழில் எழுதுகிறேன்.—‘ஸ்பிரி’.)

## அடிமைத்தனம்

இந்தியர்கள், அதிலும், நம் தமிழர்கள், அதிலும் திருநெல்வேலியில் பிறந்த நாம் அடிமைத்தனத்துக்குள் பிறந்

தவர்கள் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்கு ஓ
திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். நமக்கு ஒரு சகோதரன் இரு
கிறன் என்று வைத்துக் கொள்வோம் அவன் பெயர் ராஜன்
ராஜன் புஸ்தகங்களை படித்துப் B. A., பாஸ்பண்ணிவிட்டான்.
அவனுக்கு ஓர் வேலை பார்க்கவேண்டும். தச்சுவேலை கொத்து
வேலை ஒன்றும் தெரியாது. மேலும் அதை இழிவாக எண்ணு
கிறன். அவனுடைய எண்ணமெல்லாம் எதாவது ஒரு ஆபீ
சில் வேலைசெய்ய வேண்டும். தன் ஜீவகாலமெல்லாம், ஆபீசின்
தலைமை (ஆபீசர்) களுக்கு அடிமையாக காலம் கழிக்கவேண்
டும் என்பதே. ஆனல் ராஜன், கொஞ்சம் தன் புத்தியை உப
யோகப்படுத்தி தானே ஒரு ஆபீஸ் உண்டுபண்ணி, அதற்கு
மேல் அதிகாரியாகக்கூடும். ஆனல் அது அவனுக்கு இஷ்ட
மில்லை.

அப்படியே ராஜன் தானே, ஒரு முயற்சியெடுத்து
முன்னுக்குவரப் பிரயாசப்பட்டால் அவன் வீட்டிலுள்ளவர்கள்
அவன் சிநேகிதர், அவனுக்கு உற்சாகம் ஊட்டுவதில்லை. அதற்கு
எதிர்மாருக, அவன் எடுக்கும் முயற்சிகளைப் பழிக்கிருர்கள்.

ராஜன் இவற்றை மேற்கொண்டு, தன்முயற்சியில் சித்தி
பெற்றிருந்தால் பொருமை கொள்வது நமக்கு இயல்பு "ஆ!
இவன் என்ன செய்து விட்டான் பெருமை அடிச்சுக்கொள்
ராணுமே, நான் கூடத்தான் செய்வேன்" என்று புலம்புகிறேம்.

இதனல் நாம் அறிவது என்னவென்ருல் நாம் நம்
மையும் நம்மைச் சுற்றி உள்ளவர்களையுமே கவனித்து பொரு
மைகொள்கிறேம். நம் எண்ணமெல்லாம் நம்மை சுற்றியே நிற்
கிறது.

நாம் சுயேச்சையாக ஜீவிக்கவிரும்பினல் உண்மையைக்
கடைப்பிடிக்கவேண்டும். இதற்கு பதிலாக பொல்லாப்பைச்
சேர்த்துச் சேர்த்து வீட்டை நிரைத்து, வைக்க, வைக்க அடி
மைத்தனம் நம் ஜீவியத்தை மேற்கொண்டே வரும்.

உண்மை ஜீவியம் செய்பவன் தன் மேலதிகாரிக்கு
அடிமையாக இருந்து "காக்கா" பிடிக்க அவசியமில்லை. பொ
ருமை கொள்ளும் நபர்கள் தங்களுடன் வேலை செய்யும் உடன்
ஊழியக்காரருக்கு "கல்" வைக்கிருர்கள். அடிமைத் தனத்தின்
விளைவு இதுவே.

நேயர்களே என்னிடம் ஏன் இப்படி பிரசங்கம் செய்
கிருய் என்று கேட்பீர்கள். நான் சொல்ல வந்ததைச் சொல்லு
கிறேன். "தமிழகம்" என்பது தமிழர்களின் வீடு என்று

ருத்தப் படுத்துகிறோம். தமிழராகிய நாம் எல்லோரும் ஒரே ட்டில் வாசம் செய்கிறோம். நாம் நம் உடன் சகோதரருக்கு ழியம்செய்வதோடு அவர்கள் குற்றங்களைக் கண்டிக்கவேண்டும். ாம் முன்னேற்றமடைய விரும்பினால், அடிமைத்தனம் நீங்க வேண்டும். அதற்கு முக்கிய வழி **தன்னயமில்லாமை.**

வீட்டிலுள்ள சகோதரர் தன்னயமாக ஜீவித்தால் சண்டை சச்சரவு விளைகிறது. நம்முடைய வீடாகிய, நம் தேசம் முன்னடைய ஒற்றுமை வேண்டும். நம்முடைய எண்ணங்கள், நம்மோடு மட்டுமல்ல, மானிடமக்கள் அனைவரோடும் இருக்கவேண்டும்.

**தமிழகம்** ஒன்று இரண்டு பேரால் நடத்தப்படவில்லை. இதற்கு முன் வந்த பத்திரிகைகள் சுயநலமாக நடத்தப்பட்டன. அவற்றின் அழிவு அதுவே காரணம். இது பலபேரால் நடத்தப்படுவதால், இதற்கு நீண்ட ஆயுள் இருக்குமென்று நம்புகிறோம்.

நாம் இருக்கும் இன்நாட்டில் பத்திரிகைகள் அதிகமாக எழும்பவேண்டும். பத்திரிகைகளிலிருந்து பல செய்திகள் படிக்கிறோம். அதினால் நம் அறிவு விசாலப்படும், அதினால் பொறாமை குறையும். பொறாமை குறைவதால் அடிமைத்தனம் ஒழியும், அடிமைத்தனம் ஒழிவதால் தேசம் முன்னடையும்.

## காலத்தின் கோலம்

(By. S. E. Gnanaiah)

"நீங்கள் இந்தக் காலத்தை நிதானியாமற் போகிறதென்ன?"

காலத்தின் தன்மையை செம்மையாய் வரையறுக்குங் கற்றறிந்த பெரியாரும் மற்றுமுள்ளோரும் இக்காலத்தையும், இக்காலத்தே நடக்குங் கோலத்தையுங் கண்டு இதை;

"தாய் புத்திசொன்னாலும் மறுத்திடுங் காலமுயர்
தந்தையைச் சீறுங்காலம்
சற்குருவை நிந்தை செய்கால மெய்க் கடவுளை
சற்று மெண்ணாத காலம்

பேய்தெய்வ மென்று பசரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டிவையினுங் கேட்கின்ற காலம்
நற்பெரியோற் சொற் கேளாக் காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறுங் காலம்
மிகுசிறியவன் பெருகுங் காலம்
தெருவில் விட்டோடினவர் வரிசை பெருகுங்காலம்
வசை செப்புவோர் குதவுகாலம்
வாய்மதம் பேசிடும் நியாயக்காரருக்கு
வாய்த்த கலிகாலமையா"

என்று கூறிப் போந்தனர்.

இக் கலிகாலத்தின் கண்ணே, அகிலமும், அதன் கண்ணுள்ள பல மக்களும் கோண்டாடும், அறிவும், நாகரீகமும், மனுஷ செய்கைகளும் விர்த்தியாகும்போழுது, பலவித அட்டூழியங்களும் பெருகின்றனவாம். அதோடு உலகத்தின் அழிவும் அக்கிரமத்தின் முடிவும் தொடர்ந்து வருகின்றனவாம். எப்படியெனில்:—

முந்தித்தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து அந்திப்பகலாக ஆதரித்து தொந்திசரியச் சுமந்து பெற்றெடுத்து வளர்த்த அன்னையையும் பிதாவையும் நிந்தித்தும், அவமதித்தும் வேதனையுண்டாக்கும் கெட்டபிள்ளைகளும், பேதைகளையும், சாதுக்களையும், வாதித்து, பக்ஷித்தும், சிக்ஷித்தும் ஆதாயமடையும் கொரோரும், தஞ்சமென்றடுத்த பேரைத் தள்ளிவிடும் பாதகர்களும், கடன் வாங்கியேமாற்றிக் கையை விரிப்பாரும், கள்ளக் கணக்கெழுதி கபட்டுத்தனம் செய்வாரும் எத்தனை திரள்.

இதுவுமல்லாமல், அநியாயத்தையும், தீமையையும் செய்து நிக்கிரகம் பண்ணும் அக்கிரமக்காரரும், உண்டசோற்றுக்கு ரண்டகம் செய்து அன்னமிட்ட வீட்டுக்குக் கன்னமிடும் நன்றிகெட்ட, பாஞ்சளும், குடிவெறியின் கெடுமதியால் தன் குலத்தையும், நலத்தையும், கனத்தையும், காலத்தையும், சீலத்தையும், கெடுத்துக்கொள்ளும் பாவிகளும், உத்தியோகத்தின் வேட்கைகொண்டு, கொண்ட பெண்டிரை வழங்கி உண்டு பிழைக்கும் அநாதிப்பிண்டங்களும், அலையும்போது, இயங்காட்டி, லயங்காட்டி, நயங்காட்டி, பயங்காட்டி, மையல்காட்டி, குரங்காட்டம் ஆட்டுவிக்கும், விலைமாதரும், அவர்கள் மையலில் சிக்கியழுந்தும் ஆன்மாக்களும் அலையவில்லையா.

இவையெல்லால் ஒரு புறமிருக்கமற்றொரு பக்கம், வியாபாரஸ்தலங்களைக் கட்டுவாரும், கொடுக்கல் வாங்கல் செய்வாரும், கைத்தொழில்களை வைத்து நடத்துவாரும், எழியவர்களை விழத்தள்ளி அமல்களும் அதிகாரங்களும் செலுத்துவாரும் கணக்கற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட பயங்கரமும், குரூரமுமான இக்காலத்தில்;—

இன்னுமென்ன செய்யானையா—மானுடன்
இன்னுமென்ன செய்யானையா—

ன்பதற்கிணங்க,

கம்பியில்லாத்தந்திகளும், எரோப்பிளேன், பெலூன் செப்லின் முதலிய ஆகாயக்கப்பல்களும், க்ரூஸர், டிஸ்டிராயர், சப்மெரின் முதலிய யுத்தக் கப்பல்களும், மெசின் பீரங்கி, கப்பல் பீரங்கி, நச்சுவாயு, அக்கினிவாயு முதலிய அபாயச் சின்னங்களையுண்டுபண்ணுவதிலும் தரையுத்தம், கடல்யுத்தம், ஆகாய யுத்தம் முதலியவைகளுக்குவேண்டிய பயிற்சிகளும் நடக்கின்றனவென்று நாம் கேள்விப்படும்போது இவையெல்லாம் இக்காலத்தின் கோலமேயாமென்பதைத் தவிர வேறென்ன சொல்லக்கூடும்.

மேலும் நிலமகளின் திலகம்போல் தோன்றுகிற்கும் பத்திரீகாரத்தினங்கள் கணக்கற்றவையாம். அவற்றுள் நம் 'தமிழகம்' என்னும் இச்சிறு பத்திரிகையும், நமதகத்துளோர் ஆர்வத்தையுண்டாக்கி நம்முடைய அல்லல்களைத் தொல்லையற நீக்கி இப்பொல்லாத காலத்தில் மெல்லத்தலையெடுக்க வாரம்பித்திருக்கிறது.அன்பர்களனைவரும் ஆர்வமுடனேற்று பேர்பெருக வேண்டிய உதவிகளைப்புரிவார்களென்று எதிர்பார்க்கின்றனம். இதுவும் இக்காலத்தில் நடக்கும் ஒரு கோலமேயாம்.

## பகிரங்கக் கடிதம்

வார்த்தை புரட்டி வாயாடி வீரன் அண்ணன் "ஆனந்த விகடனுக்கு".

அண்ணு!,

சமீபத்தில் நீங்கள் பிரசுரித்திருந்த "யேசு பைத்தியகாரரா" என்ற கட்டுரையைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தேன். சபாஸ்! எவ்வளவு நேர்த்தியாக எழுதிருந்தீர்கள். இந்த மூட கிறிஸ்தவங்களுக்கு உங்களுடைய அபார மூளை எட்டவா போரது! உங்களுடைய வார்த்தைகளெல்லாம், இந்த மூடப்பசங்கள் வேறு அருந்தப்படுராங்க அதற்கு நீங்க சரியான போடு போட்டீர்களே, இந்த வாரத்து இதழில!.

இந்த கிறிஸ்தவங்கள்ள சிலபேரு சர்க்காரை தூண்டிவிடுராங்களாமே, உங்கள் சர்க்கரை போன்ற வார்த்தைகளினாலே,

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
222 983
சென்னை


அவங்களக் கொஞ்சம் சமாதானப் படுத்திவையுங்கோ. ஏ, ரோம்ப சேட்ட [illegible]ங்களுனு, ந[illegible]ழுக்கு தந்தி அடியு கோ, நம்முடைய கருப்பனும் கைவசம் இருக்கிறுன். ஒருகை பாத்திடுவோடும். ஏதோ சேலம் பிஷப் இந்துகோயில ரூ. 400/= கொடுத்து வாங்குனதினுல இப்படி உங்களுக்குக் கோபம் வந் துட்டு. நம்முட்ட இல்லாத துட்டா, இந்த கிருஸ்தவங்க ளிட்ட இருக்கு. திருச்செந்தூர் கோயிலகூட எவ்வளவு துட்டு இருக்கு. நானுகூட போனமாச உர்ச்சவத்தில கோயிலுக்கு காத்துட்டு கொடுத்தேன். இந்தப் பணங்களக்கொண்டு நாமளும் கொஞ்சம் கிருஸ்தவங்க கோயில்கள் வாங்கலாமே சொற்ப விலைக்கு பிடித்துத்தாரோன். ஆனுல் இந்த கோயிலு சாமிங்க பணத்தைக் கொடுப்பாங்களா?

என்றாலும் ஒரு கை பார்ப்போம்.

இப்படிக்கு,
உங்க தம்பி,

14—8—'35. **சட்டி உருட்டி.**

---

# தூண்டிலின் மேல் கண்

By. J. G. Sundar

சிதம்பரையர் சென்னை சர்வகலாசாலை பி. ஏ. பி. எல் பட்டா தாரி. அவர் காலத்திற்கேற்ற கோலமாக நல்லதொரு உபாயம் செய் தார். வக்கீல் போர்டைப் போட்டுக் கொண்டு கச்சேரி முன் குடி யிருந்தாலும் மாதம் 30 ரூபாய்க்கும் லாட்டரி அடிக்கும் என்பது அவ ருக்கு நன்ருய்த் தெரியும். கேசபுரம் ஜில்லா செசன்ஜட்ஜ் கோட் டில் ஒரு குமஸ்தா வேலை காலி கிடந்தது. ஹெட்கிளார்க் மிஸ்டர் சாமியாபிள்ளையைக் காலைக் கையைத்தாங்கி மனுச்செய்து அந்த குமஸ் தா வேலையில் 35 ரூபாய் சம்பளத்திற்கு அமர்ந்து கொண்டார். ஆகை யால் அவர் தமக்கு அதிசீக்கிரத்தில் எங்கேயாவது ஒரு டிஸ்டிரிக்ட் முன்சிப்பாக அல்லது சப்ஜட்ஜாக வேலை வெகு எளிதாகக் கிடைக் கும் என்பது அவருடைய எண்ணம்.

கேசபுரம் ஜில்லா செசன்ஜட்ஜ் அப்பொழுது இருந்தவர் மாற்றப் பட்டார். அவருக்குப் பதிலாக மிஸ்டர் பிளவர்பாட் என்பவர் அவ்

...யை ஒப்புக்கொண்டார். அவர் கோர்ட்டுக்கு வரும்முதல் நாளே ...ட்கிளார்க்கின் தாயார் சிவலோகபதவியானபடியால் அன்று மிஸ் ... சாமியாபிள்ளை ரஜா எடுத்துக் கொண்டார். மிஸ்டர் பிளவர்பாட் ...ார்ட்டிற்குள் நுழைந்ததும் அங்கேயிருந்த எல்லாக் குமாஸ்தாக்களின் ...க்குகளையும் விடச் சிதம்பரையருடைய மூக்குதான் முன்னாலே தெ ...ிந்தது. சிதம்பரையரும் பார்வைக்குக் கிறிஸ்தவ பயில்வான்போலவே இருப்பார். அதைக் கண்ட மிஸ்டர் பிளவர்பாட்டுக்கு அவர் மேல் ஆளைப்பார்த்த பார்வையில் ஏற்படும் அன்பு உண்டானதுமன்றி அவர் தான் தலைமைக் குமாஸ்தாவாக இருக்கலாம் என்றும் எண்ணி விட்டார். ஆக இருவரும் பத்து நிமிஷங்களாகக் காதைக் கடித்துப் பேசிக் கொண்டதன் பின் அன்றைய அலுவலும் ஆரம்பமாகி நடைபெற்றது.

அடுத்த நாள் மிஸ்டர் சாமியாபிள்ளை கோர்ட்டிற்கு வந்தார். அன்று தான் தலைமைக் குமாஸ்தா வேறு என்பது ஜட்ஜுக்குத் தெரிந்தது. அன்றையத்தினம் சாமியாபிள்ளை சிதம்பரையரைப் பார்த்து 'ஓய், ஜட்ஜ் எப்படிப் பட்டவர்?' என்று கேட்க, கனம் துரையவர்களா, நிரம்ப நல்லவர் பெயருக் கேற்றாற்போலவே பெண்களாலும் ஆண்களாலும் மிகவும் விரும்பப்படத்தக்கவர். நேற்று முழுவதும் அவர் என்னைத்தான் ஹெட்கிளார்க் என்று எண்ணியிருந்தார் என்றார். ஐயரே, உமது வித்தையை முதல் நாளே துரைக்குக் காட்டிவிட்டீரே, நீர்தாம் உம்மை ஹெட்கிளார்க்காகக் காட்டிக் கொண்டிருப்பீர், என்று சாமியா பிள்ளை கூறிவிட்டு மேல் ஒன்றும் பேசவில்லை. திடீரென்று ஜட்ஜ் சிதம்பரையர் என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. சிதம்பரையர் ஓடோடிச்சென்றார். துரை ஆபீஸ் விஷயமான சிலசெய்திகளைப் பேசவேண்டியிருந்தது. அப்பொழுது தான் சிதம்பரையர், துரைகளே தலைமைக் குமாஸ்தா இன்று வந்துள்ளார். அவரை மிஸ்டர் சாமியாபிள்ளையை அழைத்து வருகிறேன் என்றார். உடனே துரை, ஓ மன்னிக்கவேண்டும், நான் உம்மைத்தான் தலைமைக் குமாஸ்தா என்று எண்ணியிருந்தேன். நீர் என் அப்படியில்லை. வேறே ஆள் என்றால் அந்த முட்டாளைக் கூப்பிடும், என்று சொல்லி அனுப்பினார். சிதம்பரையர் சாமியாபிள்ளையிடம் வந்து பைத்தியகாரத்தனமாய் துரை தன்னோடு ஆடிய வார்த்தைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் ஒப்பிக்கலானார். ஆக அன்றுமுதல் சாமியாபிள்ளைக்கும் சிதம்பரையருக்கும் இடையில் தீராப்பகை உண்டாயிற்று. சிதம்பரையர் கோர்ட்டில் இருக்குமட்டும் தனக்கு மதிப்பு இல்லை, தன் வேலைக்கு ஆபத்தே என்று சாமியாபிள்ளை எண்ணிவிட்டார். வேலைசெய்யவும் ஆரம்பித்து விட்டார். ஆனால் மற்றொரு பக்கத்தில் சிதம்பரையருக்கும் மிஸ்டர் பிளவர்பாட்டுக்கும் இடையில் சிநேகமானது வளர்பிறைச் சந்திரனைப்போலே வளர்ந்து வந்தது. தான் எப்படியாவது ஜட்ஜுடைய சிபார்சினால் உயர்ந்த பதவி அடையலாம் என்று சிதம்பரையர் கனவு கண்டு கொண்டிருந்தார்.

இப்படியிருக்கும் நாளில் திடீரென மிஸ்டர் பிளவர்பாட் வேலையை ராஜினாமாச்செய்துவிட்டு லண்டனுக்குக் கிளம்பிவிட்டார். கடைசியாகச் சிதம்பரையர் ஜட்ஜ் துரையை வழிவிட்டனுப்புமாறு பெண்சாதி பிள்ளை

களோடு துரைபங்களாவுக்குச் சென்றார். அப்பொழுது சிதம்பரையரு
இருந்தவருத்தம் சொல்லமுடியாது. பேசும்பொழுதே துரைங்களே
கள் போகிறீர்களே போகிறீர்களே என்று வாய் விட்டு அழுத
ஜட்ஜ்துரை சிதம்பரையரை நோக்கி, "நீர், வருத்தப்படவேண்டாம் நா
உமக்கு ஒன்றும் செய்வதற்கில்லையே, சரி போய்வாரும்" என்று சொல்
லண்டன் மேல்விலாசக் கார்டு ஒன்று மட்டும் கொடுத்து அனுப்
விட்டார்.

இதற்கு மேல் சிதம்பரையருக்கும் சாமியாபிள்ளைக்கும் கீரியும் பாம்பும்போல பகைதான். சாமியாபிள்ளை மிஸ்டர் பிளவர்பாட் அங்கிருந்தபடியால் சிதம்பரையருக்கு ஒரு கெடுதியும் செய்ய முடியவில்லை. இப்பொழுது துரை வேலையை அறவே ராஜினாமா செய்து விட்டுச் சீமைக்குச் சென்று விட்டபடியால் சாமியாபிள்ளை தன்னால் கூடியவாறு சிதம்பரையர் மீது மோதினார். சிதம்பரையர் தாமிருந்த இடம் தீயாய்ப் புகைவதைக் கண்டு திடுக்கிட்டு உடனே தமது வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு வேறிடம் போக எண்ணினார், அப்படியே செய்தார்.

சிதம்பரையர் எங்கே செல்வார். வேலையில்லாத் திண்டாட்ட காலத்தில் எவர்தாம் அவ்வையருக்கு வேலை கொடுப்பார். வக்கீல்போர்டு தொங்கவிடுவதென்றால், நாலைந்து வருஷங்களுக்கிடையில் அவர் சட்டக் கல்லூரியில் உருப்போட்டுத் தேரியசட்டங்களெல்லாம் எட்ட மறந்துவிட்டன. சாதனை வகையில் பார்க்கப்போனால் அவர் தாம் ஒரு பிராமிசரி நோட்டு முதலாய்த் தம்மால் அப்பொழுது எழுதக் கூடுமோ என்று சந்தேகித்தார். ஆனால் இக்காலத்தில் பிழைக்க வேண்டுமானால் இங்கிலாந்திற்குப் போய்த் திரும்பி வரவேண்டும் என்பது மட்டும் சிதம்பரையருக்கு உறுதியான எண்ணம் உண்டு. தவிர தம்முடைய சிநேகிதர் மிஸ்டர் பிளவர்பாட் லண்டனில் இருந்தபடியால் அவர் தமது விஷயத்தில் அங்கும் இங்கும் நிரம்ப உதவக் கூடும் என்று நம்பினார். ஆகையால் தமது மனைவியைப் பிள்ளைகளோடு அவளுடைய பிறந்த அகத்திற்கு அனுப்பிவிட்டுத் தம் கைவசமிருந்த சுமார் 2000 ரூபாயையும் எடுத்துக் கொண்டு லண்டனுக்குக் கப்பலேறி விட்டார்.

சிதம்பரையர் தட்டுத்தடுமாறி படாதபாடெல்லாம்பட்டு லண்டன் போய்ச் சேர்ந்தார், அங்கே அவருக்கு இனம் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. தினந்தோறும் அவருடைய வேலையென்னவென்றால், அந்த மேல் விலாசக் கார்டை எடுத்துக்கொண்டு மிஸ்டர் பிளவர்பாட் எங்கே என்று தேடித் திரிவதுதான். ஆனால் எல்லா மாடிகள்மேலும் பிளவர்பாட்டுகள் இருந்ததே தவிர இவர் தேடித் திரிந்த பிளவர்பாட்டை எங்கும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறு தேடுவதிலேயே சுமார் ஆறு மாதங்கள் கடந்தன. சிதம்பரையருடைய பணப்பையும் கனத்தில் குறைந்து கொண்டே போகிறது. ஆனாலும் சிதம்பரையர் தூண்டிலின் மேல் கண்ணாய்ப் பொறுமையோடு பிளவர்பாட்டைத் தேடினார். எங்கெங்கே தோட்டக் கச்சேரிகள் உண்டோ, கூட்டங்கள் உண்டோ அங்கங்கே எல்லாம் சென்று தேடினார். ஈற்றிலே கப்பலேறி இந்தியா சென்று உயிர் பிழைப்பதே நன்று என்னும் முடிவுக்கு வந்தார்.

ந்தியாப் பிரயாணத்திற்கு டிக்கட்டும் பெற்று ஒரு நாள் சாயங்காலம் ப்பலேறுவதற்கு 4 மணி நேரத்துக்கு முன்னரே சென்று துறைமுகத் தைச் சுற்றிக் கொண்டிருந்தார்.

அன்று சாயங்காலம் சுமார் ஐந்து மணிக்கு லண்டன் துறைமுகத் தில் ஓர் ஒதுக்கான இடத்தில் நாலைந்து பேர் மீனுக்குத் தூண்டில் போட்டுக்கொண்டு தூண்டிலின் மேல் கண்ணுயிருந்தனர். அவர்களில் ஒருவருடைய முகம் மிஸ்டர் பிளவர் பாட்டின் முகம்போலிருக்கக் கண்டு சிதம்பரையர் கூர்ந்து கவனித்தார். ஆனால் நமது ஜட்ஜ் இப்படி தூண்டில் போட்டுக்கொண்டிருப்பாரோ என்ற சந்தேகம் சிதம்பரைய ரைப் பார்க்கவிடாமல் தடுத்தது. ஆயினும் சிதம்பரையர் தூண்டில் காரன் கிட்டத்தில் போனார். மிஸ்டர் பாட் தூண்டிலின்மேல் கண் வைத்துக்கொண்டே சிதம்பரையரையும் கண்டுகொண்டு, 'ஹலோ மிஸ்டர் சிதம்பரம், இங்கே எப்படி வந்தீர்' என்றார். கூட இருந்தவர் கள் எல்லாரும் 'ஓ ஓ, இந்திய சிநேகிதன்' என்று கூவினார்கள். உடனே சிதம்பரையரைக் கூட்டிக்கொண்டு மிஸ்டர் பிளவர்பாட் லண்டன் வீதி யில் உள்ள ஒருபெரிய மாளிகையில் தமக்குச் சொந்தமான ஒரு சிறு அறைக்கு வந்தார். சிதம்பரையர் தம்முடைய கதைகளையெல்லாம் கிழ றினர், துரை வேலையை விட்டுவந்து இருந்த நிலைக்கு வருந்தினர். மிஸ்டர் பிளவர்பாட், சிதம்பரம், இந்த வாழ்க்கையைத் தான் நான் விரும்புகிறேன். இந்த மாளிகையில் இந்த அறை எனக்கே சொந்தம், 'இங்கே சுயாதீன வாழ்க்கை' என்று கூறிவிட்டுச் சில ரொட்டித் துண் டுகளும் பாலடைகளும் கொடுத்தார்.

அடுத்தநாள் மிஸ்டர் சிதம்பரம் ஒரு இங்கிலீஷ் லாயரிடம் விடப் பட்டார். மூன்று மாதத்திற்குப்பின் அவரிடம் ஒரு சர்டிபிகேட் பெற் றார். பிறகு இந்திய செக்ரெட்டேரி ஆப்ஸ்டேற்றிடமிருந்து சென்னை கவர்னருக்குத் தமக்குத் தெரிந்த ஆட்களைக் கொண்டு ஒரு சிபார்சு கடிதம் மிஸ்டர் பிளவர்பாட் மிஸ்டர் சிதம்பரத்திற்கு வாங்கிக் கொ டுத்து ஷியாரைக் கப்பலேற்றி விட்டார். அநேக நன்றியறிதல் கூறி விட்டுச் சிதம்பரையர் கப்பலேறி இந்தியா சேர்ந்து கவர்னர் கையில் கடிதத்தை நீட்டினர். அடுத்த மாதம் முதல் தேதியில் மிஸ்டர் சிதம் பர ஐயர் கேசபுரம் ஜில்லா செசன் ஜட்ஜாக வந்து கோர்ட்டில் நின்று கொண்டு, "மிஸ்டர் சாமியாபிள்ளை" என்றார். சாமியாபிள்ளை என்ன பாடு பட்டிருப்பார் என்று சொல்லவும் வேண்டுமோ?

# சார்லி கூல்சன்

"பாண்டியா"

அமெரிக்காத் தேசத்து யுத்தத்தில் மாக்ஸ் ராஸ்வல்லி என்ற ஓர் பூதடாக்டர் ஐக்கியமாகாணப் படையில், ரணவைத்தியராக இருந்தார். அவருடைய வைத்தியசாலையில் ஏராளமான காயப்பட்ட யுத்தவீரர்கள் இருந்தனர். அவர்களுள் சார்லிகூல்சன் என்ற ஒரு சிறுவனும் இருந்தான். போர்வீரனாக சேரமுடியாதபடி சிறுவனாயிருந்த படியால் இவன் தம்புரடிக்கிறவனாக இருந்தான். இவன் இந்த வேலையில் சேர்ந்த மூன்று மாதங்களுள் கை, கால்களை இழக்க நேர்ந்தது.

டாக்டர் இவன் அங்கங்களை, ரம்பம் வைத்து அறுக்குமுன் (Operation) இவனுக்கு மயக்க மருந்து (Chloroform) கொடுத்து சுரணையற்றிருக்க விரும்பினர். ஆனால் அந்தப்பையன் மயக்க மருந்தை உட்கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டான். பின்னும் அவன் சொன்னதாவது,

"வைத்தியரே, நான் என் இருதயத்தை என் இரட்சகர் கிறிஸ்துவுக்குக் கொடுத்துவிட்டேன். ஆதலால் நீங்கள் என் கை கால்களை வெட்டும்போது பெலனற்ற எனக்கு அவர் பெலன் கொடுப்பார். எனக்கு மயக்க மருந்து வேண்டாம்".

கொஞ்சம் பிராந்தியாவது குடிப்பானோ என்று அவர் அவனைக் கேட்க அதைக் குடிப்பதற்கும் மறுத்து விட்டான்.

மறுபடியும் அவன் சொன்னதாவது,

"வைத்தியரே நான் ஐந்து வயது பிராயமாகும் போது என் தாயார், என் அருகில் முழங்கால்படியிட்டுக்கொண்டு, "சார்லி, லாகிரியான பானங்களை நீ ருசிக்காமலிருக்கும்படி இயேசுவினிடம் பிராத்தனை செய்கிறேன். உன் தகப்பனார் ஒரு பெரிய குடிகாரனாக மரித்தார். ஆனால் நீயோ பெரிய மனி

ருகும்போது வாலிபர் குடியில் மூழ்காதபடி செய்யவேண்டும் ன்று சொன்னார்கள், எனக்கு இப்போது 17 வயதாகியும் யா தாரு மதுபானமும் அருந்தியதில்லை. இப்போது குளோர ாம் கொடாமலே என் கை கால்களை எடுத்து விடுங்கள். நான் அழமாட்டேன். (வைத்தியரால்) டாக்டரால் (இரணவைத்தியம்) ஆப்பரேஷன் செய்யும் வேலை உடனே செய்யமுடியவில்லை. பின் னும் தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு, அவர் கத்தியை எடுத்து சதையை கத்தியால் வெட்டும் போது பையன் சிறி தேனும் அழவில்லை. ஆனால் ரம்பத்தை எடுத்து எலும்பை எடுக்கும்போது "ஆ! ஆ! இயேசுவே இயேசுவே என்றானே யொழிய அழவில்லை.

ஐந்து நாட்களுக்கு பின் சார்லி டாக்டரைக் கூப்பிட்டு "டாக்டர், என் வேளை வந்தது. நான் அடுத்த சூரியோதயத் தைப் பார்க்கமாட்டேன். நான் சாகுமுன் நீங்கள் எனக்குக் காட்டிய அன்புக்காக நன்றி செலுத்துகிறேன். டாக்டர் நீங் கள் யூதராயிருப்பதால் உங்களை அதிகமாக நேசிக்கிறேன். இயேசுவும் ஒரு யூதரே. ஆனால் இயேசுவின்மேல் உங்களுக்கு வெறுப்பு அதிகம். ஆனால் அவர் நல்லவர். இந்த ஐந்து நாட் களும் உங்களுக்காக நான் ஜெபித்தேன். நீங்கள் கிறிஸ்தவராக வேண்டும் என்பது என் வாஞ்சை என்று சொல்லி முடித்து, பன்னிரண்டு நிமிஷங்களுக்குப் பின் இறந்து போனான்.

அவன் சாகுமுன் கேட்டுக்கொண்ட வேண்டுகோள் என்ன வென்றால்,

"என் தலையணைக்குக் கீழேயிருக்கும் வேத புஸ்தகத்தில் என் தாயாரின் விலாசம் இருக்கும். அவர்களுக்கு நான் வீட் டைவிட்டு வந்த நாள்வரை உண்மை ஜீவியம் செய்தேன் என்று எழுதவேண்டும்".

இச்சம்பவம் டாக்டர் ராவ்வல்லியின் இருதயத்தைத் தொட் டது. இது நடந்து சில காலங்களுக்குப் பின், கிறிஸ்து உண் மையான தேவகுமாரன் என்று உணர்ந்து நல்ஜீவியம் நடத் தினார்.

ஒரு சிறுவனின் செய்கை எவ்வளவு நன்மை உண்டுபண் ணியிருக்கிறதென்று பாருங்கள். நாமும் எவ்வளவு பேருக்கு முன்மாதிரியாக இருக்கலாம்.

# அன்னம்

(M. Swiseshan.)

வில்லிப்புத்தூரில், வெஸ்ட்காட் துரை பாடசாலையில் வெகு கோடி நாட்களுக்கு முன்னால் வேதாசலம் என்னும் வேளாளச் சிறுவன் வித்தியார்த்தியாயிருந்தான். தமிழாசிரியர் நவநீத கிருஷ்ண முதலியார், நாலடியாரில் "கல்வி கரையில" என்னும் செய்யுளில் "பாலுண்குருகில்" என்ற தொடருக்கு "பாலையும் நீரையும் கலந்து வைத்தாலும் அன்னம் பாலைமட்டும் வேறு பிரித்து உண்கிறது போல" என்று கற்பித்திருந்தார்.

வேதாசலம் வீட்டுக்கு வந்து தன் தாயாரையழைத்து "அம்மா எங்கள் தமிழாசிரியர் "பாலையும் நீரையும் கலந்துவைத்தாலும் அன்னம் பாலைமட்டும் வேறுபிரித்தி உண்ணும் என்று சொன்னார். நான் இதைச் சோதித்தறியப் போகிறேன், ஒரு பாத்திரத்தில் அன்னம் போட்டுக் கொண்டுவா, செம்பில் வைத்திருந்த பாலில் தண்ணீர் கலந்து வைத்திருக்கிறேன் அதையும் சுருக்காய் எடுத்துவா" என்றான். தாயார் அதை கேட்டு "அது எப்படிடா! வாத்தியார் பாடத்தைப் பார்க்கலை, உன்னைப் பார்க்கலை. இந்தா, என்ன இழவேங்கொண்டாடு. உன்னைப் படிக்க வச்ச நாளையிலிருந்து உனக்குப் பணிவிடை செய்யச்சொல்லிதான் உடையாளி என் தலையிலே எழுதினான்" என்று சொல்லிக்கொண்டே சோற்றையும் ஷெ செம்பையும் அவன்முன் வைத்துவிட்டு அடுக்களைச் சோலியாய்ப் போய்விட்டார்கள். பையன் சோற்றுப்பாத்திரத்தில் செம்பிலிருந்ததை ஊற்றிவிட்டு அன்னம் (சோறு) நீரிலிருந்து பாலைமட்டும் வேறு பிரித்து உண்கிறதா என்று பார்த்துக்கொண்டேயிருந்தான். அன்னம் அன்னமாய் (அன்னப்பக்ஷியாய்) இருந்தாலல்லவோ அவ்வாறு உண்ணும். பார்த்த கண்ணும் பூத்துப்போக இங்ஙனம் பையன் பாடசாலை மணியடித்ததும் கேளாதவனாயிருக்க, பாடசாலைத் தலைவர் சங்கதியொன்றும் அறியாதவராய் வேதாசலத்தின் பாடசாலைத் தோழர் இருவரையும் பாடசாலைச் சேவகன் ஒருவனையும் அவன் வீட்டுக்கு அனுப்பினார். வந்தவர்கள் வீட்டில் நடந்தவற்றைக் கண்டு, வயிறு குலுங்க நகைத்து, யாவற்றையும் பாடசாலைத்தலைவருக்கும் தமிழாசிரியர் நவநீத கிருஷ்ண முதலியாருக்கும் அறிவித்தார்கள். அப்பொழுதுதான் வேதாசலம் அன்னம் என்பது தான் நினைத்தபடி சோறல்ல பக்ஷி என்பதையறிந்து கொண்டான். அது முதல் அவன் சந்தேகமான பாடங்களை உபாத்தியாயரிடமாவது தன் வகுப்பு மாணவரிடமாவது கேட்டு நன்கு அறிந்துகொண்டு சில வருடங்களுக்குள் நல்ல வேலையிலமர்ந்தான்.

இந்த அனுபவத்திலிருந்து வேதாசலம் பிள்ளை தனக்குத் தெரிந்த மாணவர்களுக்கு "ஆசானுரைத்ததை அமைவுறக் கொள்ளவேண்டும், பின் தானும் அவற்றைத் தனியாகவிருந்து மனதில் ஆக்கவேண்டும், அடுத்த மாணாக்கரிடம் கேட்டும் தெரிந்து கொள்ள வேண்டும், தெரியாத மாணவர் கேட்டால் அவருக்கு நல்ல மனதுடன் சொல்லிக் கொடுக்க வேண்டும்." என்று கூறுவார், "பழம் புண்ணுளி பரிகாரி"

---

# வள்ளுவர் தெள்ளுரை

## 1. இறைமாட்சி—J. G. S.

திருவள்ளுவர் இந்நாளில் உலகினுக்கோர் ஒப்பற்ற அறிவுச்சுடராக விளங்குகின்றார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாரதியாரும் அவரை வாழ்த்திப் போந்தார். இப்பெரியார் அருளிய திருக்குறள் என்னும் அரிய நூலைத் தெள்ளித் தெள்ளி உணர்ந்த பல உரை ஆசிரியர்களும் அதன் நயங்களை எல்லாம் ஒருங்கே அள்ளித்தந்த பாடில்லை. எவ்வளவு உரை நயங்காட்டினாலும் அவ்வளவினுக்கெல்லாம் கடந்து காணும் தனிச்சிறப்பு வாய்ந்த இந்நூலின் கருத்துக்களையேனும் எல்லாரும் அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதி, சிற்சில விஷயங்களை அங்கே கண்டவாறு வசனத்தில் தருகின்றேன். வள்ளுவர் ஒவ்வொரு விஷயத்தையும் பப்பத்துக் கவிகளில் கூறிச்சென்றார்.

இறைமாட்சி எனினும் அரசனின் பெருமை எனினும் ஒன்றே. அரசன் ஒருவனுக்கு அமைய வேண்டிய ஆறு அங்கங்களாவன. 1. படை 2. குடி 3. கூழ் 4. அமைச்சு 5. நட்பு 6. அரண். இந்த ஆறு உருப்புகளையும் உடையவனே. அரச ஏறு என்பது வள்ளுவருடைய கருத்து. இந்த ஆறு உருப்புக்களில் 'குடி' என்பதன் விசேஷம் என்ன என்று ஒரு சிலர் யோசிக்கலாம். 'குடி உயர்ந்தால் கோன் உயரும்' என்பது எல்லாரும் அறிந்தபடி . உதாரணமாய் ஆங்கில அரசரை எடுத்துக்கொள்வோம். நமது அரசருக்கு சுமார் 35 கோடி ஜனங்கள் அடங்கிய இந்நாடு வசமானது முதல் அவருக்கன்றி அவருடைய ஜாதி ஜனங்களுக்கு உண்டாயிருக்கிற வாழ்வு என்னவென்றுரைப்போம். ஆக, குடிகள் அதிகமென்னை கோனுருக்கு வாசி.

அடுத்த இரண்டு பாட்டுகளில் அரசன் ஒருவனுக்கு அமையவேண்டிய சில நற்குணங் குறிகளை எடுத்துக் கூறுகின்றார். அவைகளாவன: அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்பன. ஈகை, அறிவு, கல்வி இம்மூன்று குணங்களும் நேரடியாகச் சொல்லப்பட்டன. ஈகை என்பது கொடுத்தல். அது நல்லாசி

யலை அளித்தல் என்று பொருள்படும். அறிவு, கல்வி என டாகக் கூறினபடியால் பகுத்தறிவோடு நூலறிவும் வேண்டு பது பெறப்பட்டது. துணிவு என்று கூறாமல் துணிவுடைமை கூறுவோனேன்? துணிதல் குணமுடைய அரசன் தனது து அடக்கத்தில் வைத்திரான். துணிவு என்னும் குணம் வெளிப் யாய்த் தெரிவதன்றி அடக்கத்தில் இருந்து, வேண்டுங் காலத்தே வக்கூடியதாயிருத்தல் வேண்டும் என்ற கருத்துக் கொண்டு இவ்வ கூறினார். அஞ்சாமை, தூங்காமை இவ்விரு குணங்களையும் எதிர் மாகக் கூறினார். துணிவுடைமையைக் கூறியவர் அஞ்சாமை என தனியே கூறவானேன்? துணிவு மேற்கொண்டு வினைமேற்கொண் இடத்துத் தோல்வியுற்றால் அஞ்சும் தன்மை சில அரசருக்கு எற்ப னும் படலாம். ஆதலின் தோல்வியிலும் இடரிலும் அஞ்சாமை உடையவனாயிருத்தல் வேண்டும் என்று கருதினார் என்க. தூங்காமை=விழிப்பு இது பயத்தினால் எற்படாமல் கடமையில் ஊன்றிய கருத்தினால் எற்படும் ஜாக்கிரதை.

நாலாம் ஐந்தாம் கவிகளோடு அவர் "அரசனானவன் நீதியோடு அல்லாதவைகளை நீக்கி, குற்றத்தின் கண்படாத மதிப்புடையவனாய்த் தரும ஒழுக்கங்களினின்று வழுவாமல் ஆட்சிபுரிதல் வேண்டும். நீதி நியாயங்களை நிலைநிறுத்துவதில் பாரபக்ஷம் இல்லாது புண்ணியத்தின் நற்பயனை எளியார் வலியார் யாவரும் அடையச் செய்தல் வேண்டும். தன் பெருமையை இழந்தும் அரசன் தன்னை அரசன் என்பானாகில், அவன் அரச மாத்திற்கே ஒப்பாவான். நாட்டிற்கான நல்ல நியமங்களை விதித்தலும், பெரியோருடைய அபிப்பிராயங்களைக் கேட்டு அறிதலும் அதற்கொப்ப குடிகளை ஆளுதலும் உடையவனே அரசன் என்பதற்கு அருகன் ஆவான். தவிர அவன் எல்லாருடைய குறைகளையும் கேட்டறிந்து எவர் கண்ணுக்கும் நன்கு எட்டுபவனாயும் கடுஞ்சொற்களைக் கூறாதவனாயும் இருத்தல் வேண்டும். ஆயின் அவனுடைய பெயர் அவன் நாட்டில் உயர்த்திக் கூறப்படும். இன் சொற்களை உடையவனாய் நல்லரசியல் அமைப்பைக் கொடுத்துதவும் மன்னன் தான் எண்ணியபடியெல்லாம் தன் குடிகளை ஆட்டி வைக்கலாம் இவ்வாறு முறையோடு ஆட்சிபுரியும் மன்னவனே உலகத்தில் இறைவன் என்னும் பெயருக்கு உரியவனாகின்றான். அவனே மக்களுக்கு உண்மைத் தலைவனாக உயர்ந்துதோன்றுவான்" என்று எட்டாவது கவிகள் வரை கூறிவிட்டு அரசற்குறிய மற்றும் சில சிறப்பியல்களைக் கூறுகின்றார்.

அவைகளாவன:— 1. பொறுமை. அரசன் ஒருவன் எல்லார்க்கும் நல்லன் ஆதல் அரிது. சிலர் அவனை எசுவார்கள் சிலர் அவனைப் பேசுவார்கள். அவனோ, தன்னை எத்துபவர்களுடைய பேச்சை அமிழ்தெனவும், எசுவாருடைய பேச்சை ஆலம் (விஷம்) எனவும் கொள்ளலாகாது. தன்னை எத்துவாருடைய வலிமை கொண்டு எசுவாருக்கு இன்னல் புரிவது இக்காலத்து அரசர்களில் சிலருடைய கொள்கை. அவ்வாறு செய்யாமல் தன்னைப் பழிப்பார் உரை எத்துணை கைப்புடையதாயிருந்தும், பொறுத்தல்வேண்டும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது நமது நாட்டுப் பழமொழியன்றே. இக்கருத்துப் பற்றியே சொன்னார். வள்ளுவரும்.

இரண்டாவது கொடை, அளி, செங்கோல், குடிஓம்பல்— என நான்கு கூறினார். கொடை எனின் இது வறிஞர்திக்கற்றோர் முதலி(யோ)ர்க்குத் தருமங்காரணமாக அளிக்கும் கொடை. அரசன் மக்களில் (சி)றந்தவனாயிருந்து அளவற்ற செல்வவைப்பை உடைய தன்குடி ஜனங்(களி)டமிருந்து திரளான வரிவசூல் செய்து, அச்செல்வத்தை உடைய(இல்)லாத எளியவர்களுக்கு அதைப் பகிர்ந்து கொடுக்கும் கடமையை (உ)டையவன் என்பதே வள்ளுவருடைய கருத்து. எனவே ஈகை என்று (மு)ற்கூறப்பட்டது நல்லரசியலை அளித்தல் என்றும், கொடை என்று பிற்கூறப்பட்டது தானதருமங்களை அளித்தல் என்றும் பொருள்படுவதற்கு ஏதுவாய் அமைந்துளது.

அளி—அன்பு, தயை— தான தருமங்களை அளிப்பதற்கும் செங்கோல் நடத்துவதற்கும் அளியே அடிப்படையாக அமைதல் வேண்டும். ஆகையால், கொடை, அளி, செங்கோல் என்று ‘அளி’ ஆகிய குணத்தை இடையில் வைத்தார். செங்கோல் எனின் செவ்விய அரசாட்சி ஆட்சியமைப்பு; நீதி நெறிகளோடு மாறுபடாத ஆளுகை என்று அர்த்தம். குடியோம்பல் எனின் குடிகளைப்பேணல் என்பது பொருளாகும். செங்கோல் உடையவனாக அரசன் இருத்தல் வேண்டும் என்று கூறிய பின், அவன் குடிகளைப் பேணுபவனாக இருத்தல்வேண்டும் என்று கூறவும் வேண்டுமோ? என்ற கேள்வி எழும்பலாம். அரசன் ஒருவன் செங்கோலனாய் நிலஉரிமை, நியாயஉரிமை முதலியவைகளைக் காத்து அரசு புரிந்தாலும், அதன் பயனை அநுபவிப்பவர்கள் பெரும்பாலும் செல்வர்களே. கையிலே காசின்றியும், உழுவதற்கு நிலமின்றியும், உறைவதற்கு வீடு இன்றியும் வறிஞராய்த் தவிக்கும் எளியார்கள் அரசனுடைய சட்டங்களினால் அடையும் நன்மை என்ன? ஒன்றுமில்லை. அவர்களுக்குகோர்டு திறந்தாலென்ன மூடினால் என்ன? கலெக்டர் கச்சேரி செய்தாலென்ன? செய்யாவிட்டாலென்ன? அரசனே தன் நாட்டு எளியார்மீது நேரே அளியோடு இறங்கி நன்மை செய்தால் ஒழிய, அவ்வெளியார் எவ்வகை நியாய சட்டங்களினாலும் செங்கோலினாலும் நன்மை அடையார். ஆதலின் அரசனே அப்பேர்க்கொத்த தன் குடிகளைப் பேணல்வேண்டும் என்றார் என்க. இவ்வாறு வள்ளுவர் உள்ளி உரைத்த இலக்கணங்களை உடைய இறைவனே மாட்சியுடையவனாய் மாநிலம் புரக்கத்தக்கவன் அன்றோ. நம்மிறைவர் பெருமானும் இவ்வாறு தன் மாட்சியில் ஓங்குகவே.

222963

சென்னை

---

## அடுத்த இதழில்

[illegible]

இக்கரைக்கு அக்கரை— “பிரதாபன்”

சிறுவர் சினேகிதன்—ஒரு சிறு கதை— “ஸ்பிரி”

**சிறுவர் பகுதி.**

சாது சுந்தர்சிங்— “பாண்டியா”

செய்யுள் விடு கதைகள்— “சுவிசேஷன்”

அதிசயம் ஆனால் உண்மை— “எஸ். எஸ்”

# "Spotted Green."

BY

SCHWARTZ PON RATNAM

**Published by. Arthur H. Stockwell Ltd., London. 2 Sh. 6 d. (1Re. 8 as.)**

"......The book is valuable for the insight into the typical troubles of rural India......"

"Indian Review"

"......The author has a knack for writing fine short stories and we have no hesitation in commending his book to the reading Public......"

"The Vaitaraṇi"

"......The author has a fine sense of the dramatic...... The Blue coat, and the story of the second couple are excellent......"

"Forward"

"These stories carry a truly Indian atmosphere"

"The Scholar

## JOIN THE NAZARETH READING CLUB

## AND READ

# MAGAZINES

**List of Magazines**

Annantha Vikadan, My Magazine, Merry Magazine, Sunday Times, Short Story Magazine, True story Magazine, Indian Review, Funny Magazine.

*Apply to:—* The Secretary,

THE NAZARETH READING CLUB, Nazareth.



Printed and Pnblished by the Satya Printing Press, Nazareth.

Hon: Editor SCHWARTZ PON RATNAM, Nazareth.

for

The Public Welfa[illegible] Association, Nazareth.

## ஓர் அறிவிப்பு

# 2 படங்கள் அணா 8

"அருமையான சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள் சிலமாதங்
மாத்திரமே! எவ்வித நிலைமையுள்ளோரும் மிகசுளு
படம் பிடித்துக் கொள்ளும்படியாகவும்."

வர்த்தகர்களுக்கு மூகசின்னம்" (*Lable Stamp*)
"சிறியபடம் பெரியபடமாக்குதல்" (*Enlargment*)
"கார், லைசென்ஸ் போட்டோ"
} முதலியவை களுக்கு பொருத்தமாகவும்

அடியில் கண்ட அளவு தயார் செய்யப்பட்டிருக்கிறது.
படங்கள் மிகத்தெளிவாகவும் பார்வைக்கு அழகாயும் நெடுங் காலம் பாவிக்கக் கூடியதாகவும், செய்து கொடுக்கப்படும்.

குழந்தைகள் நீங்கலாக, வயோதிபர், வாலிபர், மாணாக் கர் முதலிய யாவரும் இடுப்புக்குமேல் (Bust) எடுத்துக் கொள்ளுதல் மிகவும் நல்லது.

படத்தின் அளவு அங்குலம் 3″ × 2″ இரண்டு படங் கள் மாத்திரம். பிரதி படம் (Extra) ஒன்றுக்கு அணா 2½.

பக்கத்துக் கிராமங்களுக்கும் போய் படம் பிடித்துக் கொடுக்கக்கூடும்; விபரம் நேரில். பகல் எந்த நேரத்திலும் படம் பிடிக்க வசதியுண்டு.

ஜி. எம். சித்தர்,
போட்டோ கிராப்பர், நாசரேத்.

## பண்டிதரத்ன ராஜவைத்தியர்.

கனவான்களே, வெகு காலமாக இலங்கையில் வைத்தியஞ் செய்து கீர்த்தி பெற்ற நாசரேத் கனம் மூர்த்தி கோவில்பிள்ளை பண்டிதர் பேரன் ரத்தினராஜ வைத்தியர் தற்சமயம் நாசரேத்திலிருந்துகொண்டு பலவிடங்களிலும் தங்கள் தொழிலை நடத்தி வருகிறார்கள். சகலவித நோய்களையும், நாள்ப்பட்ட ஜயரோகம் காசம், ஈளை, இளைப்பு. சகல மேகரோகங்கள் வெள்ளை வெட்டை நீர்கடுப்பு ஊரல் மேகத்தடிப்புகளும். முக்கியமாய் ஸ்திரீகள் கெற்ப ரோகங்களும் பெரும்பாடு பிள்ளையில்லாமை, அழிகெற்பம் ஒழுங்கீன மாதவிடாய் எரிச்சல் உளைச்சல்கள் யாவுக்கும் சிகிச்சைபெற விரும்புவோர் கீழ்க்கண்டவர்க்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

கண்ரோகம், கண்பூவை அற்புதமாய் எடுத்துவிடக்கூடும்.

விலாசம்:— R. ரத்தின ராஜ வைத்தியர்,
நாசரேத்.